

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.30 சாய்பாபா தெரு அரசு ஆரம்ப சுகாதார அலுவலக வளாகத்தில் வார்டு சபா சிறப்பு கூட்டத்தில் சிறப்பு பார்வையாளராக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், பங்கேற்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். இரா.பிருந்தா தேவி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, ஆணையாளர் டாக்டர். மா.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (27.10.2025) சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தீப்புண் காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைக்காகவே தன் வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிட்டு மானுடத்துக்குப் பெரும் தொண்டாற்றியவர்!

# சேவையும், அறிவியல் நோக்கும் நிறைந்த வாழ்க்கையினால் பலருக்கு உதவியவர் மருத்துவர் - திருமதி. மாதங்கி ராமகிருஷ்ணன்!

## மறைவுக்கு — முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

**சென்னை, அக். 29–**

**மருத்துவர் ‘பத்மஸ்ரீ’ மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:**



புகழ்பெற்ற ஒட்டுறுப்பு அறுவை (Plastic Surgery) மருத்துவர் ‘பத்மஸ்ரீ’ மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

திருமதி. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பு பயின்று முடிக்கும்போதே தங்கப்பதக்கங்கள் முதலிய ஏராளமான பதக்கங்களோடு பட்டம் பெற்ற சிறப்புக்குரியவர் ஆவார். ஒட்டுறுப்பு அறுவை மருத்துவத்தில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்ற மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் (KMC) தீவிர தீப்புண் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுவதில் முதன்மையான பங்காற்றியவர் என்பது அவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்கது.

தனது மருத்துவப் பணிகளுக்கான அங்கீகாரமாக பத்மஸ்ரீ, டாக்டர் பி.சி. ராய் விருது, தமிழ்நாடு அரசின் அவ்வையார் விருது முதலிய பல்வேறு விருதுகளைத் திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் பெற்றுள்ளார்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் துறைத் தலைவர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தில் மிகை நிலைப் பேராசிரியர், மத்தியத் தோல் ஆராய்சி நிறுவனத்தில் (CLRI) மிகைநிலை அறிவியலாளர் உள்ளிட்ட பல பொறுப்புகளில் திறம்படச் செயல்பட்ட திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள், தீப்புண் காயங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் சிகிச்சைக்கா கவே தன் வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்டு மானுடத்திற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

சேவையும், அறிவியல் நோக்கும் நிறைந்த வாழ்க்கையினால் பலருக்கு உதவிய திருமதி மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது மகள் மரு. ப்ரியா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், மருத்துவத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகப் பண்பு! அரசுக்கு நன்றி, பாராட்டு!

# தனியார் பல்கலைக்கழகச் சட்ட மசோதா திரும்பப் பெறப்பட்டதை வரவேற்கிறோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, அக். 29–**

**தனியார் பல்கலைக்கழகச் சட்ட மசோதா திரும்பப் பெறப்பட்டதை வரவேற்கிறோம்! மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதே ஜனநாயகப் பண்பு என்றும், தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ அரசுக்கு நன்றி, பாராட்டு தெரிவித்தும் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:**



தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது கொண்டு வந்து நிறை வேற்றப் பட்ட தனியார் பல்கலைக்கழக சட்டத் திருத்த மசோதா நேற்று முன்தினம் (26.10.2025) திரும்பப் பெறப்படுவதாகத் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அறிவித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

2019 ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. அரசால் கொண்டுவரப் பட்ட தனியார் பல்கலைக் கழகச் சட்டத்தில் சில திருத்தங் களை அண்மையில் மேற்கொண்டு, திருத்தச் சட்ட மசோதாவைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். அதில் சமூகநீதிக்கும், கல்வி உரிமைக்கும் ஆபத்தை விளைவிக்கும் சில அம்சங்கள் இருப்பதாகப் பொதுத் தளங்களிலும், ஆசிரியர் மாணவர்கள் மத்தியிலும் கவலை எழுப்பப்பட்டது.

இது குறித்து, ‘உண்மை’ இதழில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் போது, ”வாதாட வேண்டியவற்றுக்கு வாதாடுவது எடுத்துரைப்பது மூலமும், போராட வேண்டிவதற்குப் போராடுவதற்கும் பக்குவப்பட்ட இயக்கம் நம்முடைய இயக்கம். எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிச் சிந்தனை செய்ய வேண்டும். அரசே முழுமையாக கல்வி நிலையங்களை நடத்த வேண்டும் என்பது நம்முடைய இலக்கு என்றாலும், அந்த அளவுக்கு நிதி, நிர்வாக வசதிகள் முதலியவை இப்போது இல்லை என்றாலும், தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தம் கோரலாம் என்று குறிப்பிட்டிருந்தோம்.

**நம்மைப் போன்றவர்களின் கவலை!**

அரசே முழுமையாக கல்வித் துறையை நடத்தும்வரை, எல்லோருக்கும் கல்வி கிட்டாக் கனியாக ஆகிவிடக் கூடாது என்பதால் தான், பொருளாதார வாய்ப்புள்ளவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் படிக்கும் வாய்ப்பை உருவாக்கும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவை கல்வி வளர்ச்சி என்னும் அளவில் பலன்களைத் தந்துள்ளதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். எனினும், அதற்கு சமூகநீதியை விலையாகக் கொடுக்க முடியாது; அது கல்வி வணிகத்திற்கும் வழிவகுத்துவிடக் கூடாது என்பதே நம்மைப் போன்றவர்களின் கவலையாகும்.

அரசுக்கு நன்றி, பாராட்டு!

நமது நியாயமான கவலைகளைப் புரிந்து கொள்வது தான் ஒரு மக்களாட்சியின் அடிப்படை. சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டாலும், மக்கள் மன்றத்தில் எழுந்துள்ள குரல்களைக் கருத்தில் கொண்டு. அச் சட்ட மசோதாவைத் திரும்பப் பெற்று மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என்று அறிவித்திருப்பது தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ அரசின், அதன் முதலமைச்சரின் பக்குவத்தையும், ஜனநாயகப் பண்பையும் எடுத்துக் காட்டுகிறது. அதற்கு நமது நன்றியை யும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்வியை எல்லோருக்கும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளையும், அதில் சமூகநீதி நிலைநாட்டப் படுவதையும் விழிப்புடன் முன்னெடுப்போம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒன்றிய அரசின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து தோழமைக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

நிலையச் செயலாளர் செல்வராஜ், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாச்சலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் சார்பில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

மக்களாட்சி மாண்பைச் சிதைப்பதையும், ஜனநாயகத்தை சின்னா பின்னப் படுத்துவதையும் தொடர்ந்து தொய்வில்லாமல் செய்வதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் வழக்கமான பழக்கம் ஆகும். அதற்கு ஏற்ப தன்னாட்சி பெற்ற அமைப்புகளையும் தங்களது விருப்பத்துக்கு வளைத்து செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அனைத்தும் சர்ச்சைக்குரியதாக மட்டுமல்ல, சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன. முறையான தேர்தல், வெளிப்படையான தேர்தல், நேர்மையான தேர்தல், உண்மையான தேர்தல் நடத்துவது தான் தேர்தல் ஆணையத்தின் ஒரே பணியாகும். ஆனால் சமீபகாலமாக தங்களுக்கு விருப்பமான உத்தரவுகள் மூலமாக சந்தேகத்துக்குரிய தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தி வருகிறது. இதற்கு வெளிப்படையான உதாரணமாக பீகார் தேர்தல் அமைந்துள்ளது.

**பீகார் மாநிலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தமானது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான சதியாக மட்டுமே அமைந்திருந்தது என்பதைக் கண்டோம்.**

நம்பிக்கைக்குரிய தகவல்களின் படி பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப் பட்டார்கள். பின்னர் சில லட்சம் வாக்கா ளர்கள் சேர்க்கப்பட்டார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் போது மாண்பமை நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவையே தேர்தல் ஆணையம் மதிக்கவில்லை. பின்பற்றவில்லை. செயல்படுத்த தயாராக இல்லை. இந்த ஜனநாயக விரோதச் செயலைச் செய்யத் தூண்டியது ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆகும்.

இந்த நிலையில் SIR என்ற வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் அனைத்து மாநிலங்களிலும் விரைவில் செயல்படுத்தப்படும் எனத் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்திருந்தார். இன்றைய தினம் செய்தியாளர்களைச் சந்தித்த தலைமை தேர்தல் ஆணையர், தமிழ்நாட்டுக்கான தேதிகளை அறிவித்துள்ளார்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் இதுபோன்ற பணிகளை நடத்துவது என்பது மிகமிகச் சிரமம் ஆகும். வடகிழக்குப் பருவமழை பெய்து வரும் காலத்தில் வாக்காளர் பட்டியல் குறித்த இது போன்ற மிகப்பெரிய பணிகளைச் செய்வது சிரமம் ஆகும். நடைமுறைச் சாத்தியம் இல்லாத காலத்தை தேர்தல் ஆணையம் தேர்வு செய்துள்ளது. “புகைப்படம் ஒட்டித் தர வேண்டும், பழைய வாக்காளர் பட்டியலை இணைய தளத்தில் பார்த்து இணைக்க வேண்டும்” என்று சொல்வது எல்லாம் பெரும்பான்மை வாக்காளர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தும்.

உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் ஆதார் அட்டையை முழுமையான ஆவணமாக ஏற்க மறுப்பது ஏன்? குடும்ப அடையாள அட்டைகளை முழுமையான ஆவணமாக ஏற்க வேண்டும் என்று நாங்கள் இதுவரை வைத்த கோரிக்கையை ஏற்க மறுப்பது ஏன்?

வாக்காளர் பட்டியல் சீரமைக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அதனை அவசர அவசரமாகச் செய்யக் கூடாது. கால அவகாசம் கொடுத்து செய்ய வேண்டும். நடைமுறைச் சிக்கல்கள் இல்லாமல் செய்ய வேண்டும். ஏப்ரல் மாதம் தேர்தலை வைத்துக் கொண்டு இப்போது இதனைச் செய்யத் தொடங்குவது சரியானது அல்ல. முறையானது அல்ல. எனவே வாக்காளர் பட்டியல் சிறப்புச் சீர்திருத்தத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.

SIR என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டம் இதனுள் இருக்கலாம் எனச் சந்தேகப்படுகிறோம். பீகாரில் இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறி வைத்து இந்த நீக்கம் நடந்தன. பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம் சாட்டினார். இது போன்ற எந்தச் சதியையும் தமிழ்நாடு அனுமதிக்காது. தமிழ்நாடு ஒன்று சேர்ந்து போராடும். போராட வேண்டும்.

இது தமிழ்நாட்டுக்கான பிரச்னை ஆகும். தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் இயக்கங்களும் இதனை உன்னிப்பாக கண்காணித்து தடுத்தாக வேண்டும். எனவே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் பங்கேற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நவம்பர் 2 - ஞாயிறு அன்று காலை 10.00 மணி அளவில், தியாகராய நகரில் உள்ள “ஒட்டல் அகார்டில்” நடைபெற இருக்கிறது. இதில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அரசியல் வேறுபாடுகளை கடந்து பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அக்கூட்டத்தில் தலைவர்கள் வைக்கும் கோரிக்கைகள், ஆலோசனைகள் அடிப்படையில் நமது அடுத்தகட்ட செயல்பாடுகள் அமையும் என உறுதி அளிக்கிறோம்.

மக்களாட்சியையும், மக்களின் உரிமைகளையும், தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் மனதில் வைத்து அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒன்று சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### திருநெல்வேலி முன்னாள் எம்.பி.,

# எஸ்.ஞானதிரவியம் தந்தையார் சாமியடியான் செல்லதுரை மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 29 -

சாமியடியான் செல்லத்துரை அவர்களின் மறைவை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:–

திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ஞானதிரவியம் அவர்களின் தந்தையார் சாமியடியான் செல்லத்துரை அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

பெற்று வளர்த்த அருமைத் தந்தையினை இழந்து தவிக்கும் ஞானதிரவியம் மற்றும் அவரது குடும்பத்தார்க்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், பீளமேடு, வார்டு எண் 52, பாலன் நகர் கண்டியப்பன் திருமண மண்டபத்தில் வார்டு சபா சிறப்பு கூட்டம் மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் தலைமையில், மண்டல உதவி ஆணையர் ராம்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நா.கார்த்திக், இரா.மணிகண்டன், கி.நாராயணன், மோகன், சுமித் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மருத்துவர் மயில்சாமி, கிரீன் வே சுப்பிரமணியம், சி.டி.சி. நடராஜன், கோவிந்தராஜ், குடை ஆறுமுகம், மனோகரன், ரமேஷ்குமார், சத்தியராஜ், ஹட்கோ மாணிக்கம், ஆட்டோ வாசு, பொன்னுச்சாமி, எஸ்.ரங்கதுரை, பாலச்சந்திரன், பா.விஷ்ணு சூரியா உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் செக்கனூரணி பேரூராட்சி கேரன் மேல்நிலைபள்ளியில் நடைபெற்ற ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாமில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இம்முகாமில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்கள் தங்கவேல் மகாலிங்கம் உள்பட அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.